OS No. 170 /2022

Dated: 11.08.2025

PW 1–திரு. முரளிதரா, த.பெ. சந்தரய்யா.

2–6 , 8, 10,11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

மேற்படி 1ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்து அவ்வாறு எழுதிக்கொடுத்து அதன்அடிப்படையில் 1ம் பிரதிவாதி வழங்கிய ரசீதில் குறிப்பிட்டுள்ள காசோலை வசூலாகவில்லை என்ற விவரம் 2–15 பிரதிவாதிகளுக்கு தெரியாது என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது . 2–15 பிரதிவாதிகளுக்கு அவர்கள் பெயரில் சொத்து பதிவு செய்த போது நான் ஏதும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்று சொன்னால் நான் ஆட்சேபனை செய்தேன் ஆனால் சார் பதிவாளர் அதை அனுமதிக்கவில்லை . என்னுடைய வழக்குரையில் மேற்படி சார் பதிவாளரை நான் ஆட்சேபனை செய்ய அனுகியபோது அவர் என்னை ஆட்சேபனை செய்ய அனுமதிக்கவில்லை என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது . நான் தாக்கல் செய்த வழக்கில் கவுஸ்பாஷாவுக்கு வழங்கிய காசோலை பணமாகவில்லை என்று தெரிந்து தான் 2–15 பிரதிவாதிகள் சொத்தை வாங்கியதாக ஏதும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

(2) நான் எழுதிக்கொடுத்த பவர் ஆப் அட்டர்னி 2–15 பிரதிவாதிகளுக்கு கிரயப்பத்திரம் பதிவு செய்யும்வரையில் ரத்து செய்யவில்லை என்று சொன்னால் சரிதான் . ஆகையால் கவுஸ்பாஷா எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் நான் எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரமாக தான் கருதவேண்டும் என்று சொன்னால் எனக்கு கிரயம் செய்வதற்கு பணம் ஏதும்

வந்து சேரவில்லை. கிரயப்பத்திரத்தின்படி எனக்கு பணம் வரவில்லை என்று சொல்லுவது எனக்கும் கவுஸ்பாஷாவுக்கும் இடையே உள்ள பிரச்சனை என்று சொன்னால் அது பணம் வராததால் அந்த பத்திரம் எல்லாம் செல்லுப்படி ஆகாது என்று நான் நினைத்துக்கொண்டியிருக்கிறேன் . மேற்படி கவுஸ்பாஷா என் சார்பாக கிரயப்பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்ட படியால் அதை ரத்து செய்ய எனக்கு எந்த அருகதையும் இல்லை என்று சொன்னால் கவுஸ்பாஷா என்னை ஏமாற்றி அந்த பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். ஆகவே அந்த பிரச்சனை எனக்கும் , கவுஸ்பாஷாவுக்கும் இடையேயுள்ள பிரச்சனை என்றால் சரிதான் . நான் போட்ட வழக்கில் 2–15 பிரதிவாதிகள் மீது எந்த தவறும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

(3) ஆகவே நான் எனக்கு பணம் வரவேண்டும் என்று மட்டும் தான் கவுஸ்பாஷா மீது வழக்கு போட்டியிருக்க வேண்டும் என்றும் 2–15 பிரதிவாதிகளை இந்த வழக்கில் சேர்த்திருக்கக்கூடாது என்றால் அது தவறு . கவுஸ்பாஷாவுடன் உள்ள பிரச்சனையை தீர்க்க வேண்டும் எண்ணத்தில் தேவையில்லாமல் 2–15 பிரதிவாதிகளை இந்த வழக்கில் சேர்ந்துள்ளேன் என்று சொன்னால் அது தவறு . தற்போது சொத்தை வாங்கிய 2–15 பிரதிவாதிகள் வசம் தான் சொத்தின் சுவாதீனம் உள்ளது என்று சொன்னால் சொத்து முன்னர் எப்படி இருந்ததோ அப்படியே தான் இருக்கிறது . கவுஸ்பாஷா சென்ட் கணக்கில் தான் அந்த சொத்துக்களை விற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய வழக்கில் விளம்புகை கேட்டும் , சுவாதீனம் கேட்டும் நான் எந்த நிவாரணமும் கோரவில்லை என்று

சொன்னால் கிரயப்பத்திரம் செல்லாது என்று தான் நிவாரணம் கோரியுள்ளேன். நான் கவுஸ்பாஷாவிடம் பணத்தை கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் , கிரய ஆவணங்கள் செல்லாது என்ற கோரி வழக்கை தாக்கல் செய்தது தவறு என்றும் அவர்களை தரப்பினராக சேர்த்தது தவறு என்று சொன்னால் அது சரியல்ல . தேவையில்லாமல் 2–15 பிரதிவாதிகள் மீது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு செலவு தொகையை 2–15 பிரதிவாதிகளுக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் அது தவறு . வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் அது தவறு.

<u>16 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

(4) பொதுவாக ஒரு ரிஜிஸ்டர் ஆபீசில் பத்திரத்தை பதிவு செய்யும்போது முழு பணத்தையும் பெற்றுக்கொண்டிரா என்ற கேள்வி கேட்கப்படும் என்று சொன்னால் என்னிடம் கேட்டபோது செக் கொடுத்துள்ளதாக சொன்னேன் . நான் பொது அதிகார பத்திரம் நிலுவையிலுள்ளபோது தான் 2–15 பிரதிவாதிகள் பெயரில் கிரயப்பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் . சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்களை சரிபார்த்து அதன்பிறகு தான் ஆவணத்தை பதிவு செய்தார் என்றும் , இரண்டு தரப்பினர்களையும் கேட்டுதான் மேற்படி கிரய ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் நான் ஆட்சேபனை தெரிவித்திருந்தேன் . இரண்டு தரப்பினர் என்று நான் சொல்லுவது மேற்படி கவுஸ்பாஷா மற்றும் 2 –15 பிரதிவாதிகள் ஆகும். சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணத்தை சரிபார்த்து அதன்பிறகு தான் பத்திரங்கள் பதிவு செய்யதார்கள் என்றும் ஆகவே அந்த

ஆவணங்களை செல்லுப்படி ஆகாது என்று நான் கோருவதற்கு எனக்கு எந்த அருகதையும் இல்லை என்றால் அது தவறு.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN